ரூர்கள். நாள் ஒன்றுக்கு 800 பேருக்கு அதிகமானவர்கள் அங்கே வந்து சிகிச்சை பெறுகிறூர்கள். அவர்களுக்கு போதிய சிகிச்சை அளிக்க அங்கே வசதி இல்லை. போதிய டாக்டர்கள் இருந்தாலும் விரும்பியபடி, சிகிச்சை அளிக்க மருந்தில்லை. நல்ல டாக்டர்கள் அங்கு பணிபுரிவதால் எல்லா ஊர்களிலிருந்தும் சிகிச்சை பெற அந்த மருத்துவ மனைக்கு மக்கள் அடிக்கடி வருகிறூர்கள். ஆனால் அந்த மருத்துவ மனையில் போதிய படுக்கை வசதி இல்லை. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சேர்த்து 50 படுக்கைகள்தான் இருக்கின்றன. டாக்டர்களின் தாராள மனப்பான்மையின் காரணமாக 100-க்கு அதிகமான பேரை அங்கே வெராண்டாவில் பாயைப் போட்டு படுக்க வைத்திருக்கிறூர்கள். குடி தண்ணீர் வசதி சரியாக இல்லை. அங்கே ஒரு கிணறு இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் இறைத்து டாக்டர்களுக்கும், நோயாளிகளுக்கும் கொடுக்க ஒரு ஆள் மட்டுமே வேலை செய்ய போடப்பட்டிருக்கிறது. கிணற்றில் நிறைய தண்ணீர் இருக்கிறது. ஆகவே ஒரு மேல்நிலை நீர்த் தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த மருத்துவ மனைக்கு ஒரு பெரிய கட்டடம் கட்டவேண்டும். அது நீண்ட காலமாக இருக்கின்ற பிரச்னை. கட்டடம் கட்டுவதற்கான பிளானை, என்ஜினியர்கள் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறூர்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பனை மரத் தொழிலாளர்கள் பிரச்னை ஒரு முக்கியப் பிரச்னை. எப்படி மீனவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுக்கப்படுகிறதோ, அதுபோன்று இவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS

Nil.

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

‡28. Notice of Demands for Grants during the year 1977–78 (English and Tamil).

‡Laid on the table of the House on 27th July 1977.